‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் - முதல்வர் தொடங்கி வைத்தார்!

... முதல் பக்கத் தொடர்ச்சி

ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

முதலமைச்சர் அவர்கள், 11.7.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்டங்களில் தன்னார்வலர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் குறித்து வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு பணிகள், முகாம்கள் தொடர்பான முன்னேற்றப்பணிகள், முகாம்களில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதருவது ஆகியவை குறித்து, மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், பொதுமக்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளை, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள வசதியான அரசின் மிக முக்கியமான முன்னெடுப்பு, இத்திட்டம் என்றும், இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது சரியான தீர்வினை வழங்கும் வகையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இத்திட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். வீடு, வீடாக விழிப்புணர்வு பணி மேற்கொள்வதற்கும், முகாம்களை ஏற்பாடு செய்வதற்கும், ஒவ்வொரு ஒன்றியம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாகத் தீர்வு!

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ், கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 378 “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்கள் நடைபெறுகின்றன. இதில் ஊரகப் பகுதிகளில் 248 முகாம்களும், நகர்ப்புற பகுதிகளில் 130 முகாம்களும் நடைபெறும். சிதம்பரம் நகராட்சியில் மட்டும் 13 முகாம்கள் நடத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் சிதம்பரத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடங்கி வைத்து, ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, காதொலி கருவி வேண்டி விண்ணப் பித்த சபரீஷ் என்ற மாற்றுத்திறனாளி பயனாளிக்கு காதொலி கருவியையும், மருத்துவ காப்பீட்டு அட்டை வேண்டி விண்ணப்பித்த திருமதி செந்தமிழ் செல்வி என்ற பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு அட்டையும், மின்சார இணைப்பு பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த பெருமாள் என்ற பயனாளிக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையினையும் வழங்கினார்.

கண்காட்சி அரங்கம்: முதல்வர் பார்வையிட்டார்!

மேலும், “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற பல்வேறு துறைகளியன் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்களால் சிதம்பரத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட இன்றையதினமே தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களால், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களால் முகாம்கள் தொடங்கி வைக்கப்பட்டு, மக்களிடம் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமா வளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே. விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந் தகை, சிந்தனைச்செல்வன், தி.வேல்முருகன், சபா. ராஜேந்திரன், கோ. அய்யப்பன், ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் (மு.கூ.பொ), திருமதி.பெ.அமுதா, கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எளிய தலைவராக வாழ்ந்த கர்மவீரர் காமராஜர் பிறந்த நாளில்

மக்களை நாடி அரசு செல்லும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் தொடக்கம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சிதம்பரம், ஜூலை 17 -

கர்மவீரர் காமராசர் அவர்களின் பிறந்தநாளில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தை தொடங்கி வைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கதர்ச் சட்டை அணிந்து கருப்புச் சட்டைக்காரரின் பணிகளைச் செய்த கர்மவீரர் காமராசர்!

தந்தை பெரியாரின் வழிகாட்டலில் ஆட்சி நடத்திய பச்சைத் தமிழர்!

திறமை என்பது பிறப்பால் வருவதல்ல, வாய்ப்பு கொடுத்தால் எவரும் பெறுவது என ஓங்கி உரைத்த பெருந்தலைவர்!

மக்களோடு மக்களாக எளிய தலைவராக வாழ்ந்த அவரது பிறந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்தி, மக்களை நாடி அரசு செல்லும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கர்மவீரர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி காமராஜர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார் . நிகழ்வில் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் எம்.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், காங்கிரஸ் ரவி, துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் தொடங்கி வைக்கப்பட்டதைத்தொடர்ந்து,

சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சேலம், ஜூலை 17-

முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ”உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் இன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முகாம்களில் பங்கேற்க உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் அவர்களின் உடல்நலனை காத்திடும் வகையில் மருத்துவ சேவைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேடுகள் வழங்கி அவர்களை இம்முகாம்களில் பங்கேற்க செய்து கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், முகாம் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, சாமியான வசதி, சுகாதார வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதள வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ முகாம்கள், இசேவை மையங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாமில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, எரிசக்தித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில் நுட்ப துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை மற்றும் பால்வளத்துறை என ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மற்றும் நகர்ப்புறப்பகுதிகளில் 13 துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, வீட்டு வரி, சொத்து வரி, பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, கட்டட மனைப்பிரிவு அனுமதி, பட்டாவில் பெயர் மாற்றம், சாதிச்சான்று, இருப்பிடச்சான்று, வருமான சான்று, வாரிசு சான்று, தனிப்பட்டா, கூட்டுப்பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நல உதவித் தொகை, மின்னணு குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட சேவைகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்களின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் வாயிலாக பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் விடுபட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாயிலாக 5.50 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளில் சற்று தளர்வு ஏற்படுத்தி அறிவித்துள்ளார்கள். தற்பொழுது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக முதல மைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெறும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி. திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

சேலம் மாவட்டத்தில் இன்றையதினம் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, எருமாபாளையம் பகுதிக்குட்பட்டவர்களுக்கு எருமாபாளையம் வள்ளுவர் நகர் முத்தாயம்மாள் திருமண மண்டபத்திலும், எடப்பாடி நகராட்சி வார்டு 1,2,3க்குட்பட்டவர்களுக்கு எடப்பாடி ஜே.கே.பி. சாலை நாச்சிபாளையம் காளியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சி, வார்டு 1,10,11,12,13,14,15க்குட்பட்டவர்களுக்கு அயோத்தியாப்பட்டணம் ஆத்தூர் மெயின் ரோடு வாசு மஹாலிலும், சேலம் ஊராட்சி ஒன்றியம், இனாம் வேடுகத்தாம்பட்டி, திருமலைகிரி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு திருமலைகிரி செம்மண்திட்டு கிருஷ்ணமூர்த்தி மஹாலிலும், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், சென்னகிரி, ராஜபாளையம் பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு சென்னகிரி ருக்மணி அம்மாள் திருமண மண்டபத்திலும் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, உதவி ஆணையர்கள் திருமதி இலட்சுமி, வேடியப்பன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி ச.ஜானகி உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் - கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

பெருநகர சென்னை மாநகராட்சியில் - 7 வார்டுகளில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்கள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – தேனாம்பேட்டை மண்டலம் – 114வது வார்டில் நடைபெற்ற முகாமினைப் பார்வையிட்டு – மக்களுடன் கலந்துரையாடினார்!

சென்னை, ஜூலை 17–

முதலமைச்சர் அவர்களால், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.7.2025) தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 வார்டுகளில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடினார்.

அதன் விவரம் வருமாறு:–

முதலமைச்சர் அவர்கள், மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று முன்தினம் (15.07.2025) 7 வார்டுகளில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டு, ஸ்ரீ மகாவீர் ஜெயின் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி, பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

அடையாறு மண்டலம், வார்டு 168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

வி.க.நகர் மண்டலம், வார்டு76, ஸ்டாரஹன்ஸ் சாலையில் உள்ள வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

மேலும், மாதவரம் மண்டலம், வார்டு25ல், மாதவரம் தபால் நிலைய சாலையில் உள்ள எம்.ஆர். பேலஸிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு38ல் பட்டேல் நகர் பள்ளியிலும், வளசரவாக்கம் மண்டலத்தில், வார்டு143ல், அம்பத்தூர் இன்டஸ்ரியல் எஸ்டேட், வேலம்மாள் அரங்கிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு109ல், மத்திய பள்ளி சாலையில் உள்ள கில்நகர் விளையாட்டுத் திடலிலும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நடைபெற்றது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர். முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08. 2025 வரை ”உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, த.வேலு, எஸ். சுதர்சனம், ஜோசப் சாமுவேல், ஜெ.ஜெ.எபினேசர், ஆர்.டி.சேகர், கா.கணபதி, டாக்டர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ். மதன்மோகன், ஆர். துரைராஜ், திருமதி சரிதா மகேஷ்குமார், எஸ்.நந்தகோபால், நேதாஜி யு.கணேசன், நொளம்பூர் வே. ராஜன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இணை ஆணையர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், துணை ஆணையாளர்கள் பிரதி விராஜ், , கட்டா ரவி தேஜா, , அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), எச்.ஆர். கௌஷிக், (மத்திய வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் முதல்வரின் முகவரித்துறை சார்பில் அரசுத் துறைகளின் சேவைகளை, மக்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் “உங்களுடன் ஸ்டாலின்” என்னும் புதிய திட்டத்தை காணொலிக் காட்சி வாயிலாக கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மானம்பாடி ஊராட்சியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு முகாமை பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் . கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், மு.நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன் ஒன்றியச் செயலாளர்கள் ஜெ.சுதாகர், சுந்தர.ஜெயபால் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர்

முனைவர் ஆர்.பெருமாள்சாமி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூலை 17-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர் - முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நேற்று முன்தினம் விடுத்த செய்தி வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம் - ஒட்டன்சத்திரம் வட்டம் - 16 புதூர் ஊராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் ஆர்.பெருமாள்சாமி அவர்கள், கல்லூரி முதல்வராகவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராகவும் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி தற்போது நூருல் இஸ்லாம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் பொறுப்பிலிருந்தார்.

அவர் உடல்நலக்குறைவு காரணமாக 15.7.2025 அன்று பிற்பகல் சென்னை தனியார் மருத்துவ மனையில் இயற்கையெய்தினார்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, ஜீஜீவாடி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில், “ங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறும் முகாமில், துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் ஓசூர் மாநகராட்சி மாநகராட்சி துணை மேயர் ஆனந்தய்யா உள்ளிட்ட பலர் உள்ளனர்.